# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 10 ஆம் நாள், திங்கள் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

**<u>நிகழ்ச்சி நிரல்</u>**

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்.05க்குட்பட்ட மங்கம்மா நகர் காவிரி விஸ்தரிப்பு நகர் கீதாபுரம் காவேரி ஆற்று கரை பகுதியில் இம்மனைப்பிரிவு அமைக்கும் போது 3200 சதுர அடி கொண்ட இடத்தில் பூங்காவிற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் பூங்கா மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் நடைபயிற்சி நடைபாதை மேற்கொள்வதற்கு காலை மற்றும் மாலையில் இப்பகுதி மக்கள் இப்பூங்காவில் பொழுது போக்கு இடமாக பயன்படுத்த இருப்பதால் பூங்காவின் உட்புறம் சிறுவர் மற்றும் சிறுமியர், பெண்கள் வயதானோர் பயன்படும் வகையில் திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்கள் அமைத்தல் மற்றும் பூங்கா அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.57.40 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.57.40 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2019–20ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் **இதர சாலை பணிகள் (சாலையோரங்களில் உடற்பயிச்சி கூடம் அமைத்தல் ) என்ற தலைப்பின் (3115 ) கீழ்** ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.350.00லட்சத்திலிருந்து இப்பணிக்கான நிதியை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ7/4672/2019(மையம்)**

**தீர்மானம் எண்.207 (பொருள்–1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்.05க்குட்பட்ட மாம்பழச்சாலை காவல் நிலையம் எதிரில் பழைய காவிரி பாலம் செல்லும் அணுகு பாதையில் சாலை ஓரத்தில் பொதுமக்கள் காலை மற்றும் மாலை நேரங்களில் நடைபயிற்சி மேற்கொள்பவர்களுக்கு திறந்தவெளி நடைபாதை மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.22.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.22.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2019–20ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் **இதர சாலை பணிகள் (சாலையோரங்களில் உடற்பயிற்சி கூடம் அமைத்தல் ) என்ற தலைப்பின் (3115 ) கீழ்** ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.75.00லட்சத்திலிருந்து இப்பணிக்கான நிதியை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ7/4669/2019(மையம்)**

**தீர்மானம் எண்.208 (பொருள்–2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்.05க்குட்பட்ட மங்கம்மா நகர் மனைப்பிரிவு பகுதியில் 1200 குடியிருப்புகள் உள்ளன. இம்மனைப்பிரிவு அமைக்கும் போது வைஜெயந்தி பள்ளி 1970 சதுர அடி கொண்ட இடத்தில் பூங்காவிற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் பூங்கா மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் நடைபயிற்சி நடைபாதை மேற்கொள்வதற்கு காலை மற்றும் மாலையில் இப்பகுதி மக்கள் இப்பூங்காவில் பொழுது போக்கு இடமாக பயன்படுத்துவதால் பூங்காவின் உட்புறம் சிறுவர் மற்றும் சிறுமியர், பெண்கள் வயதானோர் பயன்படும் வகையில் திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்கள் அமைத்தல் மற்றும் பூங்கா அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.54.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.54.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2019–20ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் **இதர சாலை பணிகள் (சாலை யோரங்களில் உடற்பயிற்சி கூடம் அமைத்தல் ) என்ற தலைப்பின் (3115 ) கீழ்** ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.75.00 லட்சத்திலிருந்து இப்பணிக்கான நிதியை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ7/4664/2019(மையம்)**

**தீர்மானம் எண்.209 (பொருள்–3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 4**

இம்மாநகராட்சி கட்டுப்பாட்டில் அமைந்துள்ள தலைமை நீர்ப்பணி நிலையம், டர்பைன் நீர்ப்பணி நிலையங்களின் மூலமாக முறையே 14.00 மற்றும் 13.00 மில்லியன் லிட்டர் குடிநீர் நாளொன்றுக்கு உந்தப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீரானது மரக்கடை, விறகுப்பேட்டை, மலைக்கோட்டை மற்றும் சிந்தாமணி ஆகிய பகுதிவாழ் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய நீர்ப்பணி நிலையங்களுக்கு நீராதாரம் பெறுவதற்காக 250 எம்.எம் விட்டமுள்ள ஆழ்துளை கிணறுகளை ஆற்றின் கரையிலும், ஆற்றுக்குள்ளும் அமைக்கப்பட்டுள்ளது. இவைகளில் 5 எண்களின் ஊற்றுக் கண்கள் தடைப்பட்டு ஊற்றுத்திறன் குறைந்துள்ளது. எனவே புதிதாக 5 எண்கள் ஆழ்துளை கிணறுகளை அமைத்து 2019ம் ஆண்டு கோடை கால வறட்சி காரணமாக நிலத்தடி நீர்மட்டம் குறைந்து பொதுமக்களுக்கு வழங்கிடும் குடிநீர் பாதிப்படைய வாய்ப்புள்ளது. எனவே நீராதாரத்தை பெருக்கும் நோக்கிலும், பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்கிடவும், குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி புதிதாக 5 எண்கள் ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விபர பட்டியல் மற்றும் உள்ளூர் விலைப்புள்ளிகளை கொண்டு மதிப்பீடு ரூ.58.60 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. இப்பணிக்கான மதிப்பீடு ரூ.58.60 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கான செலவினத் தொகையினை 2019–20ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் குடிநீர் பராமரிப்பு செலவினம் (2125) என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.450.00 லட்சத்திலிருந்து ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.
3. வறட்சி நிவாரண நிதி 2019ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் பட்சத்தில், அதனை ஈடு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/4480/2019(மையம்)**

**தீர்மானம் எண்.210 (பொருள்–4) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின், நான்கு கோட்டங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை பொது தனியார் கூட்டாண்மை PPP (Puplic Private Partnership) முறையில் பராமரிப்பு செய்யவும், மின் ஆற்றல் தணிக்கை செய்தல் மற்றும் புதியதாக தெருவிளக்குகள் பொருத்தி பராமரிக்கும் பணிகளை பத்தாண்டுகளுக்கு மேற்கொள்ள மெசர்ஸ்.சபரி எலக்ட்ரிக்கல், சென்னை நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு, அதன்படி இந்நிறுவனம் கணிணி கண்காணிப்பு மையம் (CCMC) மூலம் அனைத்து தெரு விளக்குகளையும் கண்காணித்து வருகிறது. இந்நிலையில் CCMC-ல் முதலாமாண்டின் இரண்டாவது **6** மாதத்தின் படி மின் சக்தி சேமிப்பு கணக்கீடு செய்யப்பட்ட விபரத்தினை ஆய்வு செய்து TPA நிறுவனம் **03.07.2018** அன்று கீழ்காணும் விபரப்படி மின் சக்தி சேமிப்பு **43.22** % என சான்று வழங்கியுள்ளது.

| Sl. No | Description of work | Baseline values | Values achieved Kwh/year |
|---|---|---|---|
| 1 | Total baseline consumption as per IGA (in kWh) | 1,42,31,284.81 Kwh/year | 1,41,97,352.81 Kwh/year |
| 2 | Energy Savings guaranteed (in %) | 41% | 43.22% |
| 3 | Energy Savings (in kWh) | 58,34,826.77 Kwh/year | 61,36,319.18 Kwh/year |
| 4 | Actual Consumption (in kWh) | 1,42,31,284.81 Kwh/year | 80,61,034.23 Kwh/year |

மேற்கண்டுள்ள TPA நிறுவனத்தின் மின் சக்தி சேமிப்பு விபர அறிக்கையினை அடிப்படையாக கொண்டு **டிசம்பர் – 2018 முதல் மார்ச் -2019** வரை சராசரியாக மாதம் ஒன்றுக்கு (61,36,319 யூனிட்கள்/12 மாதம் = 5,11,359 யூனிட்கள்) மின் சக்தி சேமிப்பு மற்றும் சேமிப்பு தொகை கணக்கீடு செய்யப்பட்ட விபரம் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | மாதம் | கணக்கீடு செய்யப்பட்ட சேமிப்பு மின் பயனீட்டு அளவு (In Units) | ஒரு யூனிட்டிற்கு மின்வாரியத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டணம் | சேமிப்பாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|
| 1 | டிசம்பர் - 2018 | 511359 | Rs.6.35/- | 3247129 |
| 2 | ஜனவரி - 2019 | 511359 | | 3247129 |
| 3 | பிப்ரவரி- 2019 | 511359 | | 3247129 |
| 4 | மார்ச்- 2019 | 511359 | | 3247129 |
| | **மொத்தம்** | **20,45,436** | | **1,29,88,516** |

மேற்கண்ட அட்டவணைப்படி **டிசம்பர் – 2018 முதல் மார்ச் -2019** வரை சேமிப்பான தொகை ரூ.**1,29,88,516/-ஐ** இத்திட்டத்திற்காக பாரத ஸ்டேட் வங்கியில் தொடங்கப்பட்ட Escrow Account No.33012049041-ல் deposit செய்ய தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

ஒப்புதல் அளிக்கலாம்

**(கோப்பு எண்.இ6/8491/2017(மையம்)**

**தீர்மானம் எண்.211 (பொருள்–5) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலைக் கோட்டத்திற்குட்பட்ட வார்டு எண்.44 பழைய நகரம் மற்றும் குடிசை பகுதிகளை அழகுபடுத்தும் நோக்கில் மத்திய பேருந்து நிலைய பயணியர் தங்கும் விடுதியின் வெளிப்புறச்சுவர் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தின் வெளிபுற சுவர்களில் சமூக விழிப்புணர்வு மற்றும் தூய்மை இந்தியா திட்ட விழிப்புணர்வு வரைப்படங்கள் வரைதல் மற்றும் வண்ணம் பூசும் பணியினை மேற்கொள்வதற்கும், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி

கோராமல் நேரடியாக தமிழக அரசு சார்பு நிறுவனமான பூம்புகார் நிறுவனம், திருச்சி (The Tamilnadu Handicrafts Development Corporation Ltd.,) நிறுவனத்தார் மூலம் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.11.55 இலட்சத்திற்கு தயார் செய்து தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.11.55 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. தமிழக அரசு சார்பு நிறுவனமான பூம்புகார் நிறுவனம், திருச்சி ( The Tamilnadu Handicrafts Development Corporation Ltd.,) நிறுவனத்தார் மூலம் மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கலாம்.
3. **2019–2020** ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் **பேருந்து நிலையம் மேம்படுத்துதல் / ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைத்தல் (3102)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதி **ரூ.200.00 இலட்சத்திலிருந்து** இப்பணிக்கான நிதியை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ1/4309/2019(மையம்)**

**தீர்மானம் எண்.212 (பொருள்–6) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 7**

இம்மாநகராட்சி 167.23 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள 65 வார்டுகளைக் கொண்ட நான்கு கோட்டங்களாக பிரிக்கப்பட்டு உள்ளது. இப்பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் வணிக வளாகங்களில் தற்பொழுது உள்ள துப்புரவுப் பணியாளர்கள், தளவாட சாமான்கள் மற்றும் வாகன வசதிகளைக் கொண்டு வீட்டு வாசலில் திடக்கழிவுகளைத் தரம் பிரித்துச் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வரும் துப்புரவுப் பணியினை முழுமையாகச் செயல்படுத்திட 249 வாகனங்கள் தேவைப்படுகிறது என கோட்ட உதவி ஆணையர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சில வார்டுகளின் பரப்பளவு அதிகமாக உள்ளது, வீடுகளும் ஆங்காங்கே உள்ளன. மேற்கண்டவாறு அனைத்து வார்டு பகுதிகளிலுள்ள வீடுகளிலும் தினசரி திடக்கழிவுகளை வீட்டு வாசலில் தரம் பிரித்து வாங்கும் பணியினை முழுமையாக செயல்படுத்திடும் நோக்குடன் ஏற்கனவே மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை முதல்நிலை சேகரிப்பு பணி பயன்பாட்டில் உள்ள 2க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்கள் 15 எண்கள் மற்றும் தற்பொழுது புதிதாக வாங்கப்பட்ட புதிய 2க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்கள் 155 எண்கள் ஆக மொத்தம் 170 எண்கள் பயன்பாட்டில் உள்ளது.

மேற்கண்டவாறு வீட்டு வாசலில் திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கும் பணியினை முழுமையாக மேற்கொள்ளும் பட்சத்தில் தேவையான வாகனங்களின் மொத்த எண்ணிக்கை கணக்கீடு செய்யப்பட்டதில் கூடுதலாக 79 எண்ணிக்கை, 10 வருடங்களாக தொடர்ந்து திடக்கழிவு மேலாண்மை பணி பயன்பாட்டில் இருந்து வரும் 2க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்களுக்கு பதிலாக 15 எண்ணிக்கையும் மற்றும் 12 எண்கள் இரவு நேர பணிக்கும் ஆக மொத்தம் 106 எண்கள் தேவைப்படுகிறது இந்நிகழ்வில் மேற்கண்ட விவரப்படி கூடுதலாக 106 எண்ணிக்கை 2க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்கள் புதியதாக வாங்குவதற்கு உத்தேச செலவு ரூ.662.35 லட்சம் ஆகும்.

மேலும் மாநகர சாலைகளில் செல்லும் இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கு இடையூறின்றியும், மாநகரத்தினை தூய்மையாக பராமரிக்கவும் சாலையோர மண்துகள்கள் அவ்வப்பொழுது அகற்றப்பட வேண்டும். இப்பணியினை நவீன வகை மண்துகள் அகற்றும் இயந்திர வகை வாகனம் மூலம் மேற்கொள்ளலாம். 6 க.மீ கொள்ளளவுள்ள மண்துகள் அகற்றும் இயந்திர வகை வாகனம் - 2 எண் புதிதாக வாங்குவதற்கு உத்தேச செலவு ரூ.126.12 லட்சம் ஆகும்.

எனவே 106 எண்ணிக்கை 2க.மீ கொள்ளளவுள்ள இலகுரக S.S டிப்பர் வாகனங்கள் மற்றும் Road Sweeping machine fitted vehicle – 2 எண் ஆகியவற்றை மொத்தம் ரூ788.47லட்சம் செலவில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று வாங்கிக் கொள்ளளவும், இப்பணிக்கான நிதியினை சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்து தரகோரியும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப அனுமதி வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்பு பணியில் திடக்கழிவுகளை வீட்டு வாசலில் தரம் பிரித்து வாங்கும் பணிக்கு தேவையான 2க.மீ கொள்ளளவுள்ள இலகுரக S.S டிப்பர் வாகனங்கள் 106 எண்ணிக்கை மற்றும் Road Sweeping machine fitted vehicle – 2 எண் வாங்க உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.788.47 லட்சத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று வாங்கிக்கொள்ள அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கு தேவையான நிதியினை சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு உரிய கருத்துரு அனுப்ப அனுமதி அளிக்கலாம்.

**இ5/643/2019(மையம்)**

**தீர்மானம் எண்.213 (பொருள்–7) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 8**

இம்மாநகராட்சி பராமரிப்பின் கீழ் இயங்கி வரும் தலைமை நீர்ப்பணி நிலையத்தில் 1000 கே.வி.ஏ டிரான்ஸ்பார்மர்கள், HT பேனல்கள், LT பேனல்கள் 335 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார்கள், 25 குதிரை திறன் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார்கள், அதற்கான ஸ்டார்ட்டர்கள் மற்றும் பேனல்கள் அமைக்கப்பட்டு குடிநீர் உந்தும் பணியானது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கூறிய மின்னியல் சார்ந்த உபகரணங்களை இயக்கிட தகுதி வாய்ந்த பணியாளர்கள் இல்லாத நிலையில், நீர்ப்பணி நிலைய வளாகத்தை பராமரித்திடவும் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால், முன்னாள் இராணுவத்தினர் மூலம் பணியாளர்களை பணியமர்த்தி நீருந்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மின் ஆய்வாளர், திருச்சி (Electrical Line Inspector) அவர்களின் வருடாந்திர ஆய்வின் போது வழங்கிய அறிவுரையில் விதி எண். 5(4)ன்படி கல்வி தகுதி மற்றும் முன் அனுபவத்துடன் கூடிய மின்னியல் பாதுகாப்பு அதிகாரி இல்லை எனவும், முன் அனுபவம் பெற்ற பொறியற் பட்டம், கல்வித் தகுதி, மற்றும் லைசென்ஸ் பெற்ற மின்னியல் மேற்பார்வையாளரை பணியமர்த்த வேண்டும் என தனது 28.11.2014ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தற்போது பணிபுரிந்து வரும் முன்னாள் இராணுவத்தினர்களுக்கு மேற்கூறிய தகுதிகள் இல்லாத காரணத்தினால், அவர்களுக்கு பதிலாக தலைமை நீர்ப்பணி நிலையத்தை மட்டும் தகுதி வாய்ந்த பணியாளர்களை கொண்டு நீர் உந்தும் பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்களுக்கு வழங்கிடும் குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விபர பட்டியலின் விலைப் புள்ளிகளை கொண்டு மதிப்பீடு ரூ.22.70 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மற்றும் புதியதாக டெண்டர் கோரப்பட்டு தேர்வு செய்யப்படும் நிறுவனம் நல்ல முறையில் இயக்கி பராமரிக்கும் பட்சத்தில் மேலும் கூடுதலாக இரண்டு ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு செய்திடவும், இயக்கிப் பராமரிப்பதற்கு நீட்டிக்கப்படும் காலத்தில் ஒப்பந்ததாரருக்கு ஒவ்வொரு வருடமும், ஒப்பந்தத் தொகையில் 10 சதவீதம் உயர்த்தி (முதல் வருடம் நீங்கலாக) வழங்க வேண்டிய தொகைக்கும் நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.22.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் அனுமதி அளிக்கலாம்.
3. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தேர்வு செய்யப்படும் நிறுவனம் முதல் ஆண்டில் நல்ல முறையில் இயக்கி பராமரிக்கும் பட்சத்தில் மேலும் கூடுதலாக இரண்டு ஆண்டுகள் இயக்கிப் பராமரிப்பதற்கு கால நீட்டிப்பு செய்திடவும், ஒப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு செய்யும் ஒவ்வொரு வருடத்திற்கு, ஒப்பந்தத் தொகையில் 10 சதவீதம் உயர்த்தி (முதல் வருடம் நீங்கலாக) வழங்க வேண்டிய தொகைக்கும் அனுமதி அளிக்கலாம்.

4. மேற்கண்ட பணிகளுக்கான செலவினத் தொகையினை 2019–20ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் குடிநீர் பராமரிப்பு செலவினம் (2305009) என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.450.00 லட்சத்திலிருந்து ஒதுக்கீடு செய்து கொள்ளவும், கூடுதலாக இரண்டு ஆண்டுகள் தேர்வு செய்யப்படும் ஒப்பந்ததாரருக்கு இயக்கிப் பராமரிப்பதற்கான செலவினத் தொகையினை அந்தந்த ஆண்டுகளில் இதே தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**(இ4/4657/2019(மையம்)**

**தீர்மானம் எண்.214 (பொருள்–8) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 9**

இம்மாநகராட்சியின் பராமரிப்பின் கீழ் இயங்கி வரும் கீழ்க்கண்ட நீரேற்று நிலையங்கள் வாயிலாக, நாள் ஒன்றுக்கு சராசரியாக 55 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

1. தலைமை நீரேற்று நிலையம், கம்பரசம்பேட்டை.
2. டர்பைன் நிலையம், கம்பரசம்பேட்டை.
3. நீர்சேகரிப்பு கிணற்றுடன் கூடிய நீரேற்று நிலையம், பெரியார் நகர், கம்பரசம்பேட்டை.

மேற்கண்டவாறு உந்தப்படும் குடிநீரை சுத்தம் செய்திட கிருமி நாசினியாக சோடியம் ஹைப்போ குளோரைடு கிருமிநாசினி திரவத்தை 2018–19ம் ஆண்டிற்கு தேவையானதை கொள்முதல் செய்திட மதிப்பீடு ரூ.75.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு தனி அலுவலர் தீர்மானம் எண்.294, நாள்.20.08.2018ல் நிர்வாக அனுமதியளித்துள்ளதன் பேரில், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, தனி அலுவலர் தீர்மானம் எண்.317, நாள்.01.10.2018ன்படி குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மெசர்ஸ்.தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ், சென்னை நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று அனுமதி அனுமதியளித்துள்ளதனை தொடர்ந்து, 01.10.2018 முதல் இது நாள் வரை கிருமி நாசினி திரவத்தை வழங்கி வருகின்றது.

இந்நிலையில் 2018–19ம் ஆண்டின் மதிப்பீட்டின் படி இது நாள் வரை கொள்முதல் செய்யப்பட்ட திரவத்தின் விபரம் பட்டியலிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டின் படி அனுமதிக்கப்பட்ட திரவத்தின் அளவு | : | 6,42,000 லிட்டர் |
| 01.10.2018 முதல் இதுவரை பெறப்பட்ட திரவத்தின் அளவு | : | 5,19,262 லிட்டர் |
| 28.12.2018 அன்று இருப்பு பதிவேட்டின்படி இருப்பு | : | 1,22,738 லிட்டர் |

தற்போது இருப்பில் உள்ள திரவம் 17 நாட்களுக்கு மட்டுமே பயன்படுத்த இயலும். மேலும் சோடியம் ஹைப்போ குளோரைடு திரவத்தை கொள்முதல் செய்திட புதிதாக கோப்புகள் நடவடிக்கையில் உள்ள நிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி கொள்முதல் செய்ய கால தாமதம் ஏற்படும் என்பதால், தற்போது நிலவி வரும் பன்றி காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சலை கருத்தில் கொண்டு, குடிநீரை தொய்வின்றி சுத்திகரிப்பு செய்து பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.12.43/– ஆக உள்ளது. எனவே தற்பொழுது சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் வழங்கி வரும் நிறுவனமான மெசர்ஸ். தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திடம் கேட்டுக் கொண்டதில் அவர்கள் ஏற்கனவே 2018–19ம் ஆண்டு வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதமாகிய லிட்டர் ஒன்றுக்கு ரூ.9.50/– என்ற வீதத்திலேயே தொடர்ந்து வழங்கிட தங்களது 07.12.2018ம் தேதிய கடிதம் வாயிலாக ஒப்புதல் வழங்கியுள்ளனர்.

எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி **2.60** இலட்சம் லிட்டர் சோடியம் ஹைப்போ குளோரைட் திரவத்தினை மெசர்ஸ்.தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திடமே லிட்டர் ஒன்றுக்கு ரூ.**9.50** வீதம் தொடர்ந்து வாங்கி கொள்வதற்கும், **3** நீர்ப்பணி நிலையங்களில் உள்ள குளோரினேட்டர் கருவிகளை பராமரிப்பு செய்திடுவதற்கும் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

கொள்முதல் செய்யப்பட வேண்டிய திரவத்தின் அளவு:

2,60,000 லிட்டர் x ரூ.9.50 / லிட்டர் = ரூ. 24,70,000/–

3 நீர்ப்பணி நிலையத்தில் உள்ள குளோரினேட்டர் கருவிகளை 3 மாதங்களுக்கு

பராமரிப்பு செய்தல் (ரூ.5970/ மாதம் x 3x3) = ரூ.53,730/–

**மொத்தம் = ரூ. 25,23,730/–**

**(+) GST (18%) =ரூ. 4,54,271/–**

**மொத்தம் = ரூ. 29,78,001/–**

தற்போதைய சந்தை விலை ரூ.**12.43/–** ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ரூ.**9.50/–**

சேமிப்பு ரூ.**2.93** X **2,60,000** லிட்டர் = ரூ.**7,61,800/–** ஆகும்.

எனவே மேற்படி செலவினம் ரூ.**29,78,000/–**ற்கு அனுமதி கோரி தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. **2018–19**ம் ஆண்டிற்கு தேவையான சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் வாங்க மதிப்பீடு தயார் செய்து, ஒப்பந்தப்புள்ளி கோரி முடிவு செய்யும் வரை உள்ள காலத்திற்கு தற்பொழுது சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் வழங்கி வரும் நிறுவனமான மெசர்ஸ். தமிழ்நாடு கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் மூலமே தொடர்ந்து, **3** மாதங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி விலை விகிதமாகிய லிட்டர் ஒன்றுக்கு ரூ.**9.50/–** வீதம் மொத்தம் ரூ.**29.78** லட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் ஒப்புதல் வழங்கலாம்.
2. புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி முடிவு செய்யும் வரை மேற்கண்ட பணிக்கான செலவினத்தை **2018–19**ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் கணக்குத் தலைப்பு எண்.**2125**ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.**300** இலட்சத்திலிருந்து செலவு செய்துக் கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(இ4/4192/2018/மையம்)**

**தீர்மானம் எண்.215 (பொருள்–9) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்.10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட **65** வார்டு பகுதிகளில் உள்ள அந்தியோதியா அன்ன யோஜனா (AAY) திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் நகர்ப்புற ஏழை குடும்பங்களுக்கான ஒருமுறை சிறப்பு நிதியுதவித் வழங்கும் திட்டத்திற்கு தேவையான ஆதார் கார்டு விவரங்கள், வங்கி கணக்கு விவரங்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய தேவையான மென்பொருள் தயார் செய்யும் பணி மற்றும் பயனாளிகளின் விவரங்களை இணையதளத்தில் பதியும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இப்பணி தமிழக அரசின் சிறப்பு பணியாக உள்ளதாலும், குறுகிய காலத்தில் முடிக்கப்பட வேண்டிய பணியாக உள்ளதாலும் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொண்டால் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் **1994** பிரிவு **15**ன் கீழ் மேற்கொள்ள தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் **2018–19**ம் நிதியாண்டிற்கு கணினி பணியாளர் ஒருவருக்கு குறைந்த பட்ச ஊதியம் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.**390/–** என்ற தினக்கூலியினை அடிப்படையாக கொண்டு இது தொடர்பான

நிறுவனங்களிடமிருந்து கீழ்கண்ட அட்டவணைப்படி மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்கு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ எண் | விவரம் | எண்ணிக்கை | விலைப்புள்ளி அளித்த நிறுவனங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | M/s Abi Azhagi Movie Makers, 45/6, Keelapudur, Trichy. | | M/s.Newtec Communication, C116, FF Bala Residency, 5th Cross East, Thillainagar, Trichy. | | M/s. Alan Info Services Pvt., Ltd., B8U, NVV Square, 11th Cross West Extension, Thillainagar, Trichy. | |
| | | | **Rs.** | **Amount** | **Rs.** | **Amount** | **Rs.** | **Amount** |
| 1. | Preparation of offline user interface software for data entry of BPL, AAY and Street Vendors, Supervision, Consolidation Work and Report generation EXCEL format including all taxes. | 1 | 109200 | 109200 | 108500 | 108500 | 104800 | 104800 |
| 2. | Wages for Data Entry Operators | 136 (வருகை நாட்கள்) | 387 | 52632 | 390 | 53040 | 385 | 52360.00 |
| **Total** | | | | **161832** | | **161540** | | **157160** |

மேற்கண்ட அட்டவணைப்படி இப்பணியினை மேற்கண்ட M/s Alan Info Services Pvt., Ltd., B8U, NVV Square, 11th Cross West Extension, Thillainagar, Trichy என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி தொகையினை ஏற்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன்படி மேற்கொண்டமைக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

முன்பக்க அட்டவணையில் கண்டுள்ளபடி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய தேவையான மென்பொருள் மற்றும் மனித ஆற்றல் பெற்று M/s.Alan Info Services Pvt., Ltd., நிறுவனத்தினர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டமைக்கு பட்டியல் தொகை ரூ.1,57,160/— வேண்டி பட்டியல் சமர்ப்பித்துள்ளனர். எனவே, மேற்கண்ட நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.1,57,160/—னை வழங்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் கீழ் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s Alan Info Services Pvt Ltd., நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கி, பணி மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.
2. பணி மேற்கொண்டமைக்கு உண்டான செலவின பட்டியல் தொகையினை ரூ.1,57,160/—னை M/s Alan Info Services Pvt Ltd., நிறுவனத்திற்கு வழங்க அனுமதி வழங்கலாம்.

**எச்3/1310/2019(மையம்)**

**தீர்மானம் எண்.216 (பொருள்—10) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள். 11

தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் நகர்ப்புற ஏழை குடும்பங்களுக்கான ஒருமுறை சிறப்பு நிதியுதவித் வழங்கும் திட்டத்திற்கு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட 65 வார்டு பகுதிகளில் உள்ள அறிவிக்கப்பட்ட குடிசைப்பகுதி மற்றும் அறிவிக்கப்படாத குடிசைப்பகுதியில் வாழும் ஏழை மக்களை கணக்கெடுக்கும் பணி மற்றும் கணக்கெடுக்கப்பட்ட பயனாளிகளை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 2018 – 2019 ம் நிதியாண்டிற்கு கணினி பணியாளர்களுக்கு என நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி தொகையான ரூ.390/–னை அடிப்படையாக கொண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து மனித ஆற்றல்கள் பெற்று பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி தமிழக அரசின் சிறப்பு பணியாக உள்ளதாலும், குறுகிய காலத்தில் முடிக்கப்பட வேண்டிய பணியாக உள்ளதாலும் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொண்டால் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, இப்பணியினை மேற்கொள்ள இது தொடர்பான உள்ளூர் நிறுவங்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்கு செய்யப்பட்டுள்ளது.

| விவரம் | | நகர்புற ஏழைமக்களுக்கான ஒருமுறை சிறப்பு நிதியுதவி வழங்க கணக்கெடுக்கப்பட்ட பயனாளிகளை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யும் பணி. |
|---|---|---|
| விலைப்புள்ளி அளித்த நிறுவனங்கள் விவரம் | | |
| வ எண் | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்றிற்கு நபர் ஒன்றிற்கு ஊதியம் ரூ. |
| 1 | M/s Abi Azhagi Movie Makers,<br>45/6, Keelapudur, Trichy. | ரூ.389 |
| 2 | M/s Sigma Capitals,<br>32, Manimandapam Road, Gandhi Market, Trichy. | ரூ.387 |
| 3 | M/s Alan Info Services Pvt., Ltd.,<br>B8U, NVV Square, 11th Cross West Extension, Thillainagar, Trichy. | ரூ.385 |

மேற்கண்ட அட்டவணைப்படி இப்பணியினை மேற்கொள்ள M/s Alan Info Services Pvt., Ltd., B8U, NVV Square, 11th Cross West Extension, Thillainagar, Trichy. என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி தொகையான நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.385/–னை ஏற்று பணி மேற்கொண்டமைக்கு ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | நாள் | வழங்கப்பட்ட மனித ஆற்றல் | தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 01.03.2019 | 62 | 385.00 | 23870.00 |
| 2 | 02.03.2019 | 97 | 385.00 | 37345.00 |
| 3 | 03.03.2019 | 57 | 385.00 | 21945.00 |
| 4 | 04.03.2019 | 55 | 385.00 | 21175.00 |
| 5 | 05.03.2019 | 83 | 385.00 | 31955.00 |
| 6 | 03.03.2019 | 98 | 385.00 | 37730.00 |
| 7 | 07.03.2019 | 50 | 385.00 | 19250.00 |
| மொத்தம் | | 502<br>(வருகை நாட்கள்) | 385 | 193270.00 |

01.03.2019 முதல் 07.03.2019 வரை 7 தினங்களுக்கு முன்பக்க அட்டவணையில் கண்டுள்ளபடி மனித ஆற்றல் பெற்று M/s.Alan Info Services Pvt., Ltd., நிறுவனத்தினர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்மைக்கு பட்டியல் தொகை ரூ.1,93,270/–(502 வருகை நாட்கள் x ரூ.385/–) வேண்டி பட்டியல் சமர்ப்பித்துள்ளனர். எனவே, மேற்கண்ட நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.1,93,270/–னை வழங்க ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் கீழ் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s.Alan Info Services Pvt., Ltd., நிறுவனத்தின் குறைந்த விலைப் புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கி, பணி மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.
2. 01.03.2019 முதல் 07.03.2019 வரை 7 தினங்களுக்கு 502 பணியாளர்கள் மூலம் பணி மேற்கொண்டமைக்கு உண்டான செலவின பட்டியல் தொகையினை ரூ.1,93,270/–னை M/s.Alan Info Services Pvt., Ltd., நிறுவனத்திற்கு வழங்க அனுமதி வழங்கலாம்.

**எச்3/1310/2019(மையம்)**

**தீர்மானம் எண்.217 (பொருள்–11) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 12**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், வார்டு எண்.14க்குட்பட்ட கீழரண் சாலையில் அமைந்துள்ள நகர்புற ஆரம்ப சுகதார நிலையம் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்நிலையத்தில் பெரும்பலான பொதுமக்கள் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது இந்நிலையத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகள் குறைவாக இருப்பதினால், பொதுமக்கள் சிகிச்சை பெறுவதில் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட (UPHC) நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை (UCHC) மேம்படுத்த, தேவையான வசதிகளான 30 Beded Ward room, Opreation theater, Labour room, New Born care, Laboratory, Blood Storage பணிகளை மேற்கொள்ள ரூ.99.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ. 99.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. தேசிய நகர்புற சுகாதார திட்ட நிதியின் கீழ் இப்பணியினை மேற்கொள்ளலாம்.

**இ2/2220/2019(மையம்)**

**தீர்மானம் எண்.218 (பொருள்–12) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 13**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், வார்டு எண்.14க்குட்பட்ட இ.பி ரோடு பிரதான சாலையில் அமைந்துள்ள நகர்புற ஆரம்ப சுகதார நிலையம் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்நிலையத்தில் பெரும்பலான பொதுமக்கள் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது இந்நிலையத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகள் குறைவாக இருப்பதினால், பொதுமக்கள் சிகிச்சை பெறுவதில் சிரம்மத்திற்கு உட்கொள்ளப்படுகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட (UPHC) நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை (UCHC)ஆக மேம்படுத்தி, புதிதாக கட்டப்பட உள்ள 30 படுக்கை கொண்ட கட்டிடத்திற்கு மின்சாரம், தண்ணீர் வசதி மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள ரூ.20.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.20.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. தேசிய நகர்புற சுகாதார திட்ட நிதியின் கீழ் இப்பணியை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**இ2/2219/2019(மையம்)**

**தீர்மானம் எண்.219 (பொருள்–13) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள். 14

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டம், வார்டு எண். 34க்குட்பட்ட சுந்தராஜ் நகர் பூங்கா, வார்டு எண்.35க்குட்பட்ட ஆர்.எஸ் புரம் (வடக்கு மற்றும் தெற்கு பூங்கா, வார்டு எண். 37க்குட்பட்ட முல்லை நகர் பூங்கா, வார்டு எண்.38க்குட்பட்ட பாரதிநகர், சின்னச்சாமி பூங்கா மற்றும் மகாத்மா காந்தி பூங்கா, வார்டு எண்.42க்குட்பட்ட அம்மன்நகர் மற்றும் காஜாமலை காலனி பூங்கா, வார்டு எண். 39க்குட்பட்ட பசுமை பூங்கா, ஆகிய 10 பூங்காக்கள் மக்கள் பயனில் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு ஆண்டு பராமரிப்பு பணி அவசியமாகிறது. மேலும் பூங்காவை பராமரிக்க தோட்டக்காரர் மற்றும் இரவு நேரத்தில் பூங்காவை பாதுகாவலர் கொண்டு பூங்காவை பாதுகாக்கும் பணி மேற்கொள்ளவும் ரூ.21.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கு அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.21.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. **2019 - 20ம்** ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் **புதிய பூங்காக்கள் உருவாக்குதல் மற்றும் பழைய பூங்காக்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் (3102)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.350.00 இலட்சம் நிதியிலிருந்து இப்பணியை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/2892/2019(மையம்)**

**தீர்மானம் எண்.220 (பொருள்–14) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 15**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்:41 க்குட்ப்பட்ட கிராப்பட்டி அன்பு நகரிலுள்ள திறந்தவெளி உடற்பயிற்சி கூடத்தில் நடைபாதை, நீரூற்று, சுற்றுச்சுவர் கிரில், ஓய்வு அறை, உடற்பயிற்சி சாதனங்கள், முகப்பு பெயர் பலகை போன்ற பணிகளை மேற்கொள்வது அவசியமானதாகும். எனவே இப்பணிகளை அன்புநகர் திறந்தவெளி கூடத்தில் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.23.15 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.23.15 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. **2019-2020ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் இதர சாலைப்பணிகள் (சாலையோரங்களில் உடற்பயிற்சி கூடம் அமைத்தல் ) (3115)** நிதியிலிருந்து இப்பணியை செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/4275/2019(மையம்)**

**தீர்மானம் எண்.221 (பொருள்–15) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 16**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு எண்:01 க்குட்ப்பட்ட சரஸ்வதி கார்டன் (நடேசன் லே அவுட்)ல் பூங்காவிற்காக காலியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் 200க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. எனவே அப்பகுதி மக்களுக்கு பூங்கா அமைப்பது அவசியமானதாகும். எனவே மேற்கண்ட பகுதிக்கு பூங்கா அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.30.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.30.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. **2019 - 20ம்** ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் **புதிய பூங்காக்கள் உருவாக்குதல் மற்றும் பழைய பூங்காக்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் (3102)** நிதியிலிருந்து இப்பணியை செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/4277/2019(மையம்)**

**தீர்மானம் எண்.222 (பொருள்–16) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 17**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு எண்:03 க்குட்ப்பட்ட சீனிவாசலு நினைவு பூங்கா கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வருகிறது. இப்பூங்காவிற்கு 300க்கும் மேற்பட்டோர் வந்து செல்கின்றனர். எனவே பூங்காவினை மேம்படுத்துவது மிகவும் அவசியமானதாகும். எனவே இப்பூங்காவிற்கு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.50.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. **2019-20ம்** ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் **புதிய பூங்காக்கள் உருவாக்குதல் மற்றும் பழைய பூங்காக்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் (3102)** நிதியிலிருந்து இப்பணியை செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/4278/2019(மையம்)**

**தீர்மானம் எண்.223 (பொருள்–17) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 18**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக் கோட்டம், வார்டு எண்.39க்குட்பட்ட பஞ்சப்பூர் பகுதியில் பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள அனோராபிக் குட்டை 1, 2 (Anaerobic Pond 1 & 2) மற்றும் ஃபேக்லேடிவ் குட்டை (Faculative Pond) ஆகிய குளங்களில் ஆகாய தாமரை அதிக அளவு படர்ந்திருப்பதாலும், மேலும் குளங்களில் கழிவுநீர் மண்கள், குப்பைகள் அதிக அளவில் இருப்பதால், கழிவு நீர் குழாய்களில் மண்துகள்கள் அடைப்பதால் Treatment Plant உள்ளே செல்லாமல் கழிவுநீர் வெளியே வழிந்தோடுகிறது. இதனால் அப்பகுதியில் சுகாதாரக்கேடு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் சுகாதாரம் கருதி அனோரோபிக் குட்டை 1, 2 (நீளம்.227மீ, அகலம்.87மீ மற்றும் நீளம்.227மீ, அகலம்.87மீ) பேக்லேடிவ் குட்டை (நீளம்.420 மீ அகலம்.217 மீ) ஆகிய அளவுகளில் உள்ள குளங்களில் 5 அடி ஆழத்திற்கு தூர்வாரும் பணி மேற்கொள்ளுதல், ஆகாய தாமரை அகற்றுதல் மற்றும் கழிவு நீரை வெளியேற்றுதல் ஆகிய இதர பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.61.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.61.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2019–20ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் **பராமரிப்பு செலவினம் – புதைவடிகால் என்ற தலைப்பின் (2125/1) கீழ்** ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.200.00 லட்சத்திலிருந்து இப்பணிக்கான நிதியை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ7/4305/2019(மையம்)**

**தீர்மானம் எண்.224 (பொருள்–18) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்.19**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 2016ம் ஆண்டு முதல் மத்திய அரசினால் நடத்தப்பட்டு வரும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஸ்வச் சர்வேக்ஷன் போட்டியில் கலந்துக்கொண்டு வருகிறது. மேற்படி ஸ்வச் சர்வேக்ஷன் போட்டி 2016ம் ஆண்டில் கலந்துக்கொண்டு 73 நகரங்களில் 3வது இடமும், 2017ம் ஆண்டில் கலந்துக்கொண்டு 434 நகரங்களில் 6வது இடமும், 2018ம் ஆண்டில் கலந்துக்கொண்டு 4203 நகரங்களில் 13வது இடமும் மற்றும் 2019ம் ஆண்டில் கலந்துக் கொண்டு 4237 நகரங்களில் 39வது இடமும் பெற்றுள்ளது.

இந்நிலையில் தற்போது மத்திய அரசினால் மேற்படி போட்டியானது ஸ்வச் சர்வேக்ஷன் 2020 என அறிவிக்கப்பட்டு போட்டியின் கால அளவுகள் ஏப்ரல் – 2019 முதல் ஜீன் – 2019 வரை ஒரு பகுதி, ஜீலை – 2019 முதல் செப்டம்பர் – 2019 வரை ஒரு பகுதி மற்றும் அக்டோபர் – 2019 முதல் டிசம்பர் – 2019 வரை ஒரு பகுதி என மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேற்படி போட்டியில் கலந்துகொண்டு, போட்டியின் விதிகளின்படி, செயல்படுத்தப்படும் திட்டப்பணிகளை அதற்குரிய இணையதளத்தில் (Web Page)ல் மாதந்தோறும் பதிவேற்றம் செய்ய வேண்டும். அதனை தொடர்ந்து அதற்குண்டான மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை பட்டியல், பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்களின்படி மேற்படி இணையதளத்தில் (Web Page)ல் வெளியிடப்படும்.

தற்போது மேற்படி போட்டிக்கான பணிகள் யாவும் இம்மாநகராட்சி அலுவலர்கள் / பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி போட்டி தொடர்பாக பொதுமக்களிடையே ஆய்வு பணி மேற்கொண்டு, அதற்கான ஒருங்கிணைந்த அறிக்கைகள் மற்றும் இதர ஆவணங்களை தயார் செய்து மத்திய அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது, ஆனால் மேற்படி பணிகளை மேற்கொள்ள தற்போது இம்மாநகராட்சியில் போதிய அளவு பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், 1) நகர முன்னேற்றம் குறித்த சுயவிவரம் (Support for City Profile Development) 2) வார்டு வாரியான ஆய்வு பணி மேற்கொள்ளுதல் மற்றும் தரச்சான்று தயாரித்தல் (Wardwise surveying and Ranking), 3) உள்ளாட்சி அமைப்புக்கு தேவையான ஆவணங்களை தயார் செய்தல் (Supporting ULB for documentation), 4) மத்திய அரசின் வலைதளத்தில் (Web Page)ல் மாதவாரியாக பதிவேற்றம் செய்யப்படும் புள்ளி விவரங்களை பதிவேற்றம் செய்தல் (Support for updating monthly MIS data in MOHUA portal) மற்றும் 5) இறுதி அறிக்கை தயார் செய்து வழங்குதல் (Final Report) சமர்ப்பித்தல் போன்ற பணிகளை ஜீலை – 2019 முதல் டிசம்பர் – 2019 வரை மேற்கொள்ள இத்துறையில் அனுபவம் வாய்ந்த நிறுவனத்தினை நியமனம் செய்து, பணி மேற்கொள்ள ரூ.37.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.37.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2019–2020ம் ஆண்டின் **வரவு செலவுத்திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை இதர பணிகள் (2305111)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதி **ரூ.50.00 இலட்சத்தில்** இப்பணிக்கான செலவினத்தை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ8/3071/2019(மையம்)**

**தீர்மானம் எண்.225 (பொருள்–19) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – ந. இரவிச்சந்திரன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**